# நோய்வாய்ப்பட்ட குழந்தைகள், குழந்தைகள் பராமரிப்பகம் அல்லது ஆரம்பப் பள்ளிக்குச் செல்லாமல் எப்போது வீட்டிலிருக்க வேண்டும்?



## 1. கடந்த 24 மணி நேரத்தில் உங்கள் குழந்தைக்குக் காய்ச்சல், இருமல், தொண்டைப் புண் அல்லது மூக்கடைப்பு ஏற்பட்டதா?



- உங்கள் குழந்தைகளை வீட்டிலேயே வைத்திருங்கள்.
- குழந்தைக்குக் கோவிட்-19 பரிசோதனை செய்யவும்.

குழந்தைக்கு மூக்கு ஒழுகுதல் அல்லது சளி மட்டுமே இருந்தால், மற்றபடி நன்றாக உணர்ந்தால், குழந்தைப் பராமரிப்பகம் அல்லது பள்ளிக்குச் செல்லலாம், மேலும் கோவிட்-19 பரிசோதனை செய்யத் தேவையில்லை.

முன்பே அறிந்த ஒவ்வாமை இருந்தாலும் இது பொருந்தும்.



**குழந்தைக்குச் சளி மற்றும் இவை இருந்தால் மருத்துவரை அழைக்கவும்:**

- குழந்தை விளையாட விரும்பாமல், சுறுசுறுப்பாக இல்லாமல் இருந்தால்.
- குழந்தைக்குக் காய்ச்சல், தசை வலி, பசியின்மை, சோம்பல், குமட்டல் அல்லது தலைச்சுற்றல் இருந்தால்.
- குழந்தைக்குச் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் அல்லது ஓய்வெடுக்கும்போது வழக்கத்தை விட வேகமாகச் சுவாசித்தால்.

தாங்கள் எப்படி உணர்கிறார்கள் என்று குழந்தைகளால் விளக்க முடியாது, அதனால் அவர்கள் சிணுங்கலாகவும், ஒட்டிக் கொண்டும், எரிச்சலாகவும் இருக்கக்கூடும். உடல் நலம் குன்றிய உங்கள் குழந்தையைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டால், உங்கள் மருத்துவரை அணுக வேண்டும் அல்லது எப்போதும் இயங்கும் மருத்துவச் சேவையைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

## 2. பரிசோதனை கோவிட்-19 ஐ உறுதி செய்யுமா?



**ஆம்**

உங்கள் குழந்தை வீட்டிலேயே இருக்க வேண்டும்.

குழந்தைகள் உடல் நலக் குறைவாக இருக்கும்போது, நீங்களும் உங்கள் குடும்பமும் பின்பற்ற வேண்டிய விதிகளை முனிசிபாலிடி அறிவுறுத்தும்.



**இல்லை**

உங்கள் குழந்தைக்குக் காய்ச்சல் இல்லாமல் நன்றாக இருந்தால், குழந்தைப் பராமரிப்பகம் அல்லது பள்ளிக்குச் செல்லலாம்.

சளி போன்ற லேசான அறிகுறிகள், தொண்டைக் கட்டு அல்லது சிறிய இருமல் இருந்தாலும், குழந்தைப் பராமரிப்பகம் அல்லது பள்ளிக்குச் செல்லலாம்.

NIPH